# தருமபுரி நகராட்சி

## 2025-2026 நிர்வாக அறிக்கை

# தருமபுரி நகராட்சி

## 2025–2026 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை 01.04.2025 முதல் 31.03.2026

---

## 1. அமைப்பும் நிர்வாகமும்

### நகராட்சியின் தோற்றம் மற்றும் எல்லைகள்

இந்நகராட்சி முதலில் பேரூராட்சியாக இருந்து 14.02.64 ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசு ஆணை எண் 360–ன்படி 01.04.64 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பிறகு 05.08.71 ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக 14.06.71 ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 1401–ன்படி தரம் உயர்த்தப்பட்டது. மேலும் 31.08.87 ம் தேதிய 651 எண் நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு உத்தரவில் இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக 12.10.87 முதல் தரம் உயர்த்தி உத்தரவிடப்பட்டு முதல் நிலைநகராட்சியாகவும் அரசு ஆணை (நிலை) எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 2.12.2008 ன்படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 2.12.2008 முதல் தேர்வுநிலை நகராட்சியாகயாகவும், செயல்பட்டு வந்தது. அரசு ஆணை என் 50 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 06.03.2019 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தியும், சிறந்த நகராட்சிக்கான பரிசாக ரூ.15.00 லட்சம் தமிழக அரசால் வழங்கியும் செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் எல்லையில் விருபாட்சிபுரம் கிராமம் (சில பகுதிகள் நீங்கலாக) வெள்ளேகவுண்டன்பாளையம் கிராமம் (சில பகுதிகள் நீங்கலாக) ஹலே தருமபுரி கிராமம் (சில பகுதிகள் நீங்கலாக) மற்றும் அன்னசாகரம் கிராமம் (கொல்லஹள்ளி கிராமம் நீங்கலாக) முதலிய வருவாய் கிராமப் பகுதிகள் அடங்கியுள்ளது. அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் எல்லைகளில் மாற்றம் எதுவும் இல்லை.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 68,619 மக்கள் தொகையினைக் கொண்ட இந்நகராட்சியின் பரப்பளவு 11.65 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

## 2. நகர்மன்றம்

இந்நகராட்சியில் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த வார்டுகள் 33 ஆகும். இதில் பொதுவில் 15 வார்டுகளும், பெண்களுக்கு என 16 வார்டுகளும், ஆதிதிராவிடர்கள் பெண்களுக்கென 1 வார்டும் ஆதிதிராவிடர்கள் பொது என 1 வார்டும் ஒதுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் 04.03.2022 அன்று பதவி ஏற்று அறிக்கை ஆண்டு வரை செயல்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் அவசர கூட்ட நடவடிக்கையாக பொருள்களும் சாதாரண கூட்ட நடவடிக்கையாக பொருள்களும் மொத்தம் பொருள்கள் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 3. மேலாண்மை

01.04.2025 முதல் 01.03.2026 வரை திரு.இரா.சேகர் அவர்கள் ஆணையாளராகவும், 02.03.2026 முதல் 31.03.2026 வரை திருமதி.மு.ரா.வசந்தி ஆணையாளராகவும் பணிபுரிந்து வந்துள்ளார்கள்.

அறிக்கையாண்டில் 01.04.2025 முதல் 10.08.2025 திரு.சி.மாதையன் வருவாய் ஆய்வாளர் மேலாளர்(பொ) ஆகவும், 11.08.2025 முதல் 31.03.2026 வரை திரு.க.நாகநாதன் நிர்வாக அலுவலராகவும், 01.04.2025 முதல் 09.09.2025 வரை திரு.எம்.ஜி.குமார் உதவியாளர் கணக்கர்(பொ)ஆகவும்,10.09.2025 முதல் 31.03.2026 வரை திரு.கோ.தங்கராஜ் கணக்கு அலுவலராகவும் பணிபுரிந்து வந்துள்ளார்கள்.

## 4. மன்றக்கூட்டங்கள்

அறிக்கை ஆண்டில் சாதாரண கூட்டங்கள் 3 மற்றும் அவசர கூட்டம் 3 நடைபெற்றுள்ளது. மொத்தம் 343 பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 5. குழுக்கள்

அறிக்கை ஆண்டில் வரி மேல்முறையீட்டு குழு நியமனக்குழு, ஒப்பந்தக்குழு நடைமுறையில் இருந்து வருகிறது.

## 6. நிர்வாகம்

அறிக்கை ஆண்டில் பொதுப் பிரிவு பணியாளர்களின் ஊதிய செலவு ரூ.24,95,99,739/– ஆகும். இது சென்ற ஆண்டு ரூ.2,44,19,082/– ஆக இருந்தது.

## 7. பொறியியல் மற்றும் குடிநீர் பணி

பொறியியல் பிரிவில் 01.04.2025 முதல் 20.06.2025 வரை திருமதி.எஸ்.புவனேஸ்வரி செயற்பொறியாளர் அவர்களும், 31.07.2025 முதல் 31.08.2025 வரை திரு.ஆர்.செந்தில்குமார் செயற்பொறியாளர்(பொ) அவர்களும் 19.09.2025 முதல் 11.02.2026 வரை திரு.எம்.விக்டர் ஞானராஜ் செயற்பொறியாளர்(பொ) அவர்களும் 01.04.2025 முதல் 06.08.2025 வரை மற்றும் 12.01.2026 முதல் 31.03.2026 வரை திரு.எஸ்.அறிவழகன் இளநிலை பொறியாளரும், 08.08.2025 முதல் 01.12.2025 வரை திரு.கிஷோர்குமார் உதவிப்பொறியாளர் அவர்களும், 07.08.2025 முதல் 31.03.2026 வரை திருமதி.தீ.தீபலட்சுமி உதவிப்பொறியாளர் அவர்களும் பணிபுரிந்தார்கள்.

குடிநீர் பணிகள் 1 பைப் லைன் பிட்டர், 4 மேல்நிலை தொட்டி காவலர், 1 வரைவாளர்,1 மின்பணியாளர், 2 பொதுப்பணி மேற்பார்வையாளர்கள், 4 பணி ஆய்வாளர்கள் ஆகிய பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

அறிக்கை ஆண்டில் ரூ.1,86,89,844/– ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.1,90,81,354/– வழங்கப்பட்டுள்ளது.

## 8. பாலம், சிறுபாலம், நெடுஞ்சாலை மற்றும் தொழிற்துறை

இந்நகராட்சி எல்லைக்குள் ஐந்து நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலை இலாகாவினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.இந்நகர்மன்றத்தால் பராமரிக்கப்பட்ட சாலைகளின் விபரம் பின்வருமாறு ஆகும்.

1. சிமெண்ட் சாலை – 38.11 கி.மீ
2. தார் சாலை – 67.15 கி.மீ
3. மண் சாலை – 08.95 கி.மீ

2025–2026 ஆண்டு சாலை பராமரிப்புக்காக ரூ.491.00/– லட்சம் செலவிடப்பட்டது. இது சென்ற ஆண்டு ரூ.613.00/–லட்சமாக இருந்தது.

1) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2025–2026 நிதி 15.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2025–2026 ரூ.85 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3) வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் 2025–2026 ம் ஆண்டுக்கு எதுவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.110.55 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை பணிகளும் மற்றும் இதர பணிகளும் குடிநீர் நிதியில் ரூ.99.15 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் விநியோகக் குழாய் மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மற்றும் மின்மோட்டார் பழுது பார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது மற்றும் கல்விநிதியின் கீழ் நகராட்சி பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் பழுது பார்க்கும் பணியினை ரூ.65.75லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 9. சத்திரங்கள்

நகர்மன்றத்தால் தங்கும் விடுதிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. நகராட்சி எல்லைக்குள் பயணிகள் தங்கும் விடுதி ஒன்று நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 10. தளவாடங்களும் கருவிகளும் (சாலை உருளை மற்றும் கலவை இயந்திரம் )

இந்நகராட்சியில் சாலை உருளை மற்றும் கலவை இயந்திரம் எதுவும் பராமரிப்பதில்லை.

## 11. விளக்கு வசதி

அறிக்கை ஆண்டில் நகராட்சி பராமரிப்பில் உள்ள மின் விளக்குகள் விபரம் பின்வருமாறு ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. | 20 வாட்ஸ் LED | 1715 எண்ணிக்கை |
| 2 | 40 வாட்ஸ் LED | 134 எண்ணிக்கை |
| 3 | 70 வாட்ஸ் LED | 660 எண்ணிக்கை |
| 4 | 120 வாட்ஸ் LED | 249 எண்ணிக்கை |
| 5 | 130 வாட்ஸ் LED | 298 எண்ணிக்கை |
| 6 | 36 வாட்ஸ் LED | 95 எண்ணிக்கை |
| 7 | 40 வாட்ஸ் LED | 359 எண்ணிக்கை |
| 8 | 50 வாட்ஸ் LED | 60 எண்ணிக்கை |
| 9 | 100 வாட்ஸ் LED | 223 எண்ணிக்கை |
| 10 | 150 வாட்ஸ் LED | 120 எண்ணிக்கை |
| 11 | 300 வாட்ஸ் LED | 10 எண்ணிக்கை |
| | மொத்தம் | 3589 எண்ணிக்கை |

தெருவிளக்கு மற்றும் இதர பணிகளுக்கும் 1 ஒயர்மேன், 2 மின்பணி உதவியாளர்களும் பணியில் உள்ளார்கள். மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் நடப்பு ஆண்டில் ரூ.84,00,000/– செலுத்தப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் செலவு தொகை ரூ.70,00,000/– ஆகும்.

## 12. கல்வி

இந்நகராட்சி பராமரிப்பில் 6 ஆரம்பப் பள்ளிகளும், 7 நடுநிலைப் பள்ளிகளும் ஒரு உயர்நிலைப் பள்ளியும் பராமரிக்கப்பட்டு வந்தது. இதில் ஒரு ஆரம்பப் பள்ளி மற்றும் ஒரு நடுநிலைப் பள்ளியில் உருது பாடமொழியாகக் கொண்டவை ஆகும். 09.03.1990 ம் தேதிய கல்வி துறை அரசு உத்திரவு எண் 347 ல் நகராட்சிகளில் பராமரித்து வந்த பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களை கல்வி இலாகாவிற்கு மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டதின் பேரில் இந்நகராட்சி பள்ளிகளில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களை கல்வி துறைக்கு 1.4.1990 முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## 13. இடவசதியும் உபகரணங்களும்

மொத்தம் 14 நகராட்சி பள்ளிகளில் 11 பள்ளிகள் சொந்தக் கட்டிடத்திலும் 3 பள்ளிகள் வாடகைக் கட்டிடத்திலும் இயங்கி வருகிறது. அனைத்து பள்ளிகளிலும் குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் பள்ளி கட்டிட வாடகைக்காக தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

## 14. அ. ஆரம்பக் கல்வி நிதி

அறிக்கையாண்டில் கல்வி வரி கீழ்கண்டவாறு விதிக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களுக்கு ஆண்டு வாடகை மதிப்பில் அரைவருடத்திற்கு 2.50% சதவிகிதமும், காலிமனை சொத்து வரியில் 0.25% சதவிகிதமும் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வந்தது.அறிக்கையாண்டில் கல்வி கணக்கில் வரவு செலவு விபரம் பின்வருமாறு ஆகும்.

### பொது வரவு

| | | | |
|---|---|---|---|
| 1. | பற்றாக்குறை மானியம் அரசிடமிருந்து வரவு | .. | இல்லை |
| 2. | கல்வி வரி அரசு மானியம் பிரிவு 57ன்படி | .. | இல்லை |
| 3. | பொதுநிதியிலிருந்து 30 சதவிகிதமும் உதவித் தொகை வரவு | .. | இல்லை |
| 4. | இதர சில்லரை வரவு | .. | இல்லை |
| 5. | முதலீடுகள் மீதான வட்டி வரவு | .. | இல்லை |
| 6. | வங்கி வட்டி வரவு | .. | 688915 |
| 7. | கல்வி வரி வசூல் வரவு | .. | 19799970 |
| | மொத்த வரவு | | 19799970 |

### செலவு

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர்களின் சம்பளம் | .. | இல்லை |
| 2. | ஆசிரியர் அல்லாதவர்களின் சம்பளம் | .. | இல்லை |
| 3. | பள்ளிக் கட்டிட வாடகை | .. | 83200 |
| 4. | சில்லரை செலவு | .. | 572525 |
| 5. | பராமரிப்பு வேலைகள் | .. | – |
| 6. | மின் கட்டணம் | | |
| | மொத்த செலவு | | 655725 |

## ஆ. முதியோர் கல்வி

இந்நகராட்சியில் முதியோர் கல்வி பள்ளிகள் ஏதும் நடத்தப்படுவது இல்லை.

## 15. பிரத்யேக பள்ளிகள் பொது வாசக சாலை முதலியது

இந்நகராட்சியில் ஒரு வாசகசாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட நூலக அலுவலக நிர்வாகத்தினரால் மாவட்ட மைய நூலகம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் பிரத்யேக பள்ளி எதுவும் நடத்தப்படவில்லை. இந்நகராட்சியில் அறிவுசார் மையம் சந்தைப்பேட்டையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

# பொது சுகாதாரம்

## 16. மருத்துவமனை

இந்நகராட்சியில் யாதொரு மருத்துவமனையும் நடத்தப்படவில்லை.தனியார் மருத்துவமனைகள் உள்ளன. மேலும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை துவக்கப்பட்டு நவீன வசதிகளுடன் 2025–2026 ஆம் ஆண்டில் மருத்துவ படிப்பிற்கான மாணவர் சேர்க்கையும் நடைபெற்று செயல்பட்டு வருகிறது.

## 17. நோயாளிகள் கணக்கு

இந்நகர்மன்றத்தால் மருத்துவமனை எதுவும் பராமரிக்கப்படவில்லை.

## 18. பொது சுகாதாரம்

இந்நகராட்சியில் பொது சுகாதாரம் கீழ்குறிப்பிட்டுள்ள பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நகர் நல அலுவலர் | .. | 0 |
| 2. | துப்புரவு அலுவலர் | .. | 1 |
| 3. | துப்புரவு ஆய்வாளர்கள் | .. | 4 |
| 4. | துப்புரவு மேற்பார்வையாளர் | .. | 10 |
| 5. | களப்பணி உதவியாளர் | .. | 1 |
| 6. | லாரி ஓட்டுனர் | .. | 4 |
| 7. | துலக்குனர் | .. | 1 |

இப்பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் ரூ. 2,21,84,510/– ஊதியம் வழங்கப்பட்டது. சென்ற ஆண்டில் ரூ.1,84,87,092/– ஆகும்.

## 19. கமலாநேரு தாய்சேய் நல விடுதிமற்றும் நகர் நல மையம்

இந்நகராட்சியில் தாய்சேய் நல விடுதி ஒன்று பராமரிக்கப்படுகிறது. சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

தாய் சேய் நல விடுதியில் 4 மகப்பேறு உதவியாளர்கள், 3 மகப்பேறு ஆயாக்கள், இரவு காவலர் 1 ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு அறிக்கையாண்டில் ஊதியம் ரூ.57,77,611/– வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ரூ.48,14,676/– ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் நகர் நல மையம் ஒன்று தாய்சேய் மைய கட்டிடத்தில் கூடுதலாக இயங்கி வருகிறது. நகர்நல மையம் துணை இயக்குநர், சுகாதார பணிகள் தருமபுரி அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு மருந்தாளுநர் மற்றும் ஒரு ஆய்வக உதவியாளர் மற்றும் ஒரு செவிலியர் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள்.

| | பிறப்பு விகிதமும், மகப்பேறும் | 2025–2026 |
|---|---|---|
| 1. | 2025–2026 ல் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | |
| | பிறப்பு | 7679 |
| | இறப்பு | 474 |
| 2. | 2025–2026ல் இறந்து பிறந்த குழந்தைகள் | 26 |
| 3. | தாய்சேய் நல விடுதியில் கவனித்த பிறப்புகள் எண்ணிக்கை. | |
| | சென்ற ஆண்டு | 0 |
| 4. | இறந்து பிறந்த குழந்தைகள் | 0 |

| தடுப்பு ஊசி போடப்பட்ட விபரம் | குழந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|
| போலியோ ''O'' | 640–539 |
| பெண்டா | 640–560 |
| டி.டி.கர்பிணிகள் | 698–628 |
| பி.சி.ஜி. +''O'' போலியோ | 640–539 |
| எம்.ஆர். | 594 |
| 5 Years DPT | 746–746 |
| டி.டி. 10 Years | 1013–903 |
| டி.டி. 16 Years | 1401–1314 |
| 1 ½ டி.பி.டி.பூஸ்டர் | 640–563 |

## 20. காலரா

2025–2026ல் காலரா பாதிப்பு இல்லை.

## 21. டெங்கு

### டெங்கு தடுப்பு நடவடிக்கை

இத்திட்டத்தின் கீழ் 8 கொசு ஒழிப்பு பணியாளர்கள் நகர் முழுவதும் கொசு ஒழிப்பு தடுப்பு மருந்து புகை தெளிப்பான் மூலம் தெளிக்க பயன்படுத்தப்படுகிறார்கள். நடப்பு ஆண்டில் 33 வார்டுகளிலும் டெங்கு தடுப்பு நடவடிக்கையாக தினசரி களப்பணிகளை மேற்கொள்ள 77 பணியாளர்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 22. துப்புரவு

இந்நகராட்சியில் மொத்தம் 215 நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் பணியிடங்கள் உள்ளது. இதில் 77 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு நகரத்தில் அனைத்து விதமான பொது சுகாதாரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களுக்காக 2025–2026 ம் ஆண்டில் வழங்கப்பட்ட ஊதியம் ரூ.6,52,28,529/– சென்ற ஆண்டு ஊதியம் ரூ.5,43,57,108/– ஆகும். நகரில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை எடுத்துச் செல்ல 4 லாரிகளும் 25 பேட்டரி வண்டிகளும் 21 ஆட்டோகளும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 23. உரம் தயாரித்தல்

இந்நகராட்சியின் 33 வார்டு பகுதிகளில் சேகரம் ஆகும் மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்க 4 நுண் உரக்கிடங்கு மையங்கள் துவக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 2025–2026ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மொத்த கலவை உரம் | 864 மெ.டன் |
| 2. | தயாரிப்பிற்கான செலவு | இல்லை |
| 3. | மொத்த விற்பனை | 819 மெ.டன் |
| 4. | விற்பனை மூலம் வரவு | இல்லை |
| 5. | 31.3.2026 ல் கையிருப்பு | 45 மெ.டன் |

## உரக்கிடங்கு

இந்நகராட்சிக்கு அருகாமையில் உள்ள தடங்கம் கிராமம் சர்வே எண் 266/3, 267/3 ல் பரப்பு 11.08 ஏக்கர் புறம்போக்கு நிலத்தினை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நவீன உரம் தயாரிக்க மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் 49804/2006/த2 நாள் 16.11.2006ல் நில நுழைவு முன் அனுமதி வழங்கியுள்ளார்.

வீடுகள், உணவகங்கள் மற்றும் பூங்காக்கள், ஆகியவற்றில் இருந்து தினசரி பெறப்படும் மக்கும் குப்பைகள் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள நான்கு நுண்உர மையங்களில் உரமாக மாற்றப்பட்டு விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. வளம் மீட்பு மையம் (Resource Recovery Center) சந்தைப்பேட்டை, மதிகோண்பாளையம், பச்சியம்மன் கோவில் ஆகிய முன்று இடங்களில் குப்பைகளில் இருந்து உபயோகமான பொருட்கள் பிரித்தெடுக்கும் மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மறு சுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக அனுப்பி வைக்கப்படுகிறது.

## 24. பொது சுகாதாரமும்– பாதுகாப்பும்

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்களுக்கு இலவசமாக சீருடைகள், சோப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்கள், கையுறை முகவுரை மற்றும் கம்பூட் ஆகியவை வாங்கி வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு 18 பழைய குடியிருப்புகள் உள்ளது. மேலும் புதிய குடியிருப்புகள் 24 புதியதாக கட்டப்பட்டுள்ளது. அரசு நிர்ணயம் செய்துள்ளவாறு சம்பள விகிதங்கள், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

துப்புரவு பணியாளர்கள் மொத்தம் 215 எண்ணிக்கையில் 77 நபர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். பொது சுகாதா பணிக்கு பணியாளர்கள் குறைவாக உள்ளதால் 161 நபர்களை தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்து நகரில் தூய்மை பணி மேற்கொண்டு வருகிறார்கள்.

### பொது கழிப்பிடங்கள் கட்டண கழிப்பிடங்கள்

அறிக்கை ஆண்டில் நகரில் மொத்தம் 26 சமுதாய கழிப்பிடங்கள் பொது மக்கள் உபயோகத்திற்காக கட்டப்பட்டு உள்ளது. இவை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான நகர் மற்றும் புற நகர் பேருந்து நிலையம் மற்றும் ராஜகோபால் பூங்காவில் சேர்த்து 5 கட்டண கழிப்பிடங்கள் பயணிகள் வசதிக்காக கட்டப்பட்டுள்ளது.

### வீட்டு கழிப்பிடங்கள்

அறிக்கை ஆண்டில் நகரில் உள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை வரி விதிப்பு எண்ணிக்கை 21963 ஆகும். இதில் நீருற்று கழிப்பிடங்கள் 95% வீடுகளில் உள்ளது. புதியதாக குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி கேட்டு வரும் வரைபடங்களை தவறாமல் நவீன கழிப்பிடம் சேர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு சேர்க்கப்பட்ட பின்னரே அனுமதி அளிக்கப்படுகிறது.

### உணவு கலப்படம்

தற்போது இப்பணி உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு அத்துறையின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

### அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்

நகராட்சி எல்லையில் நடத்தப்பெறும் தொழில்களுக்கான உரிமையாணை கட்டணம் வசூலிக்கப்பட்டு நகராட்சி நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. விற்பனை நிலையங்கள், பொது சுகாதாரப் பணியாளர்களால் பார்வையிடப்பட்டு வருகிறது. மேற்படி வியாபாரங்களுக்கு உரிமையாணை வழங்கியதில் அறிக்கையாண்டில் ரூ.6,23,700/– வந்துள்ளது. சென்ற ஆண்டில் வரவு ரூ.5,32,700/– ஆகும்.

## 25. பொது பயன்தரும் இனங்கள்

இந்நகராட்சியின் பயன்தரும் இனங்கள் பேருந்து நிலையம், வாரச்சந்தை, தினசரி சந்தை, பஸ்நிலைய கடைகள், ஆடு அடிக்கும் தொட்டி, கட்டண கழிப்பிடங்கள், மீன் மார்கெட் ஆகியவைகள் ஆகும்.

### போக்குவரத்து

இந்நகராட்சியால் யாதொரு போக்குவரத்தும் நடத்தவில்லை.

### சந்தைகள்–தினசரி மற்றும் வாரச்சந்தை

இந்நகரில் தினசரி சந்தை ஒன்றும், வாரச்சந்தை ஒன்றும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2025–2026 அறிக்கையாண்டில் ரூ.36,11,940/– வரவு வந்துள்ளது. சென்ற ஆண்டு வரவு ரூ.75,61,425/– ஆகும்.

### வண்டிப்பேட்டை

வண்டிப்பேட்டை எதுவும் பராமரிக்கப்படவில்லை.

### பேருந்து நிலையம்

இந்நகரில் தியாகி தீர்த்தகிரியார் திடலில் ஒரு பகுதியில் நகர பேருந்து நிலையமும் மற்றொரு பகுதியில் புறநகர் பேருந்து நிலையமும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு பேருந்து நிலையத்தில் சராசரியாக 450 பேருந்துகள் வந்து செல்கின்றன. அரசு உத்திரவுக்கு இனங்க 11.3.2002 முதல், முதல்நிலை பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 15/–கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நடப்பு ஆண்டில் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு /– வரவு வந்துள்ளது. சென்ற ஆண்டு ரூ.20,23,088/– ஆகும்.

அறிக்கையாண்டில் பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மற்றும் தொலைக்காட்சி வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமையை குத்தகைக்கு விட்டதின் மூலம் 2025–2026 ல் வரவு ரூ.42,433/– ஆகும். சென்ற வருடத்தில் வரவு ரூ.80,000 /–ஆகும். பொது நிதியின் கீழ் பேருந்து நிலையம் மற்றும் இதர இடங்களில் 88 கடைகளும், 40 காலிமனைகளும், இரும்புபெட்டிகள்–10 ம் உள்ளன. புற நகர் பேருந்து நிலையத்தில் 73 கடைகள், 2 ஓட்டல்கள் மற்றும் 3 அறைகளும், நகர பேருந்து நிலையத்தில் 106 கடைகள் மாத வாடகை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதன் மூலம் நடப்பு ஆண்டில் வருவாய் ரூ.4,28,97,731/–ஆகும். சென்ற ஆண்டு வருவாய் ரூ.4,86,83,668/–ஆகும்.

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் நிலையம் மூலம் அறிக்கையாண்டில் வரவு ரூ.3,68,455/– ஆகும் . சென்ற ஆண்டு ரூ.18,65,955/– ஆகும். பழைய மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணம் செலுத்தி உபயோகப்படுத்தப்படும் நான்கு கழிவறைகள் மற்றும் ராஜாகோபால் பூங்கா மூலம் அறிக்கையாண்டில் வரவு ரூ. /–ஆகும். சென்ற ஆண்டு வரவு ரூ.91,40,925/–ஆகும்.

பேருந்து நிலையத்தில் ஒரு எடைபார்க்கும் இயந்திரம் தனிநபருக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இந்த இனத்தில் ரூ. /– ஐ வாடகையாக வரப்பெற்றுள்ளது. சென்ற ஆண்டு 29,000/– ஆகும்.

பேருந்து நிலையத்தில் உள்ள பொருள் பாதுகாப்பு அறைக்கு அறிக்கை ஆண்டில் வரவு ரூ.84,845/– ஆகும். சென்ற ஆண்டு வரவு ரூ.5,63,971/– ஆகும்.

## ஆடு அடிக்கும் தொட்டிகள்

இந்நகராட்சியில் ஆடு அடிக்கும் தொட்டி ஒன்று நவீன முறையில் ரூ.23.00 லட்சம் மதிப்பீட்டில் சொந்தமாக கட்டி முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மாடு அடிக்கும் தொட்டி எதுவும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் இறைச்சி விற்பனை கடைகளின் மூலம் அறிக்கையாண்டில் ரூ. /– வரவு வரப்பெற்றுள்ளது. கடந்த ஆண்டு வரவு ரூ.7,56,106/– ஆகும். ஆடுஅடிக்கும் தொட்டிக்கு வரும் ஆடுகளை கால்நடை உதவி மருத்துவரால் சான்றளிக்கப்பட்ட பின்னர் அறுக்கப்படுகிறது.

## தொழிற்சாலைகள்

இந்நகரில் குறிப்பிடத்தக்க தொழிற்சாலைகள் ஏதும் இல்லை.

## 26. தற்காலிக ஆக்கிரமிப்பு

ஏதுமில்லை

## 27. நிரந்தர ஆக்கிரமிப்புகள்

1988 ம் ஆண்டு ஜனவரி முதல் தருமபுரி நகராட்சி பகுதிகளை விரிவான நில அளவை ( Detailed Survey ) பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.அதன் மீது ஆட்சேபணைகள் , ஆலோசனைகள் பெறப்பட்டு விரிவான ஆய்வு செய்யப்பட்டது. பெறப்பட்ட ஆட்சேபனைகளை பரிசீலனை செய்யப்பட்டு, ஆய்வு பணிகளையும் முடிக்கப்பட்டு இறுதி அறிவிப்பு, தருமபுரி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு ஜூன் 26 , 1998 ல் உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, மாவட்ட நில அளவை அலுவலகம், தருமபுரி அவர்களால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 26.6.1998 முதல் ரீ சர்வே ரெக்கார்டுகள் நடைமுறைக்கு வருகின்றது. சம்பந்தப்பட்ட ரீ சர்வே ரெக்கார்டுகள் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகராட்சி தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை பதிவு செய்யப்பட்டு ஆட்சேபனை உள்ள ஆக்கிரமிப்புகள், ஆட்சேபனை இல்லாத ஆக்கிரமிப்புகள் என இனம் பிரிக்கப்பட்டு நகராட்சிகள் சட்டப்படி ஆட்சேபனை ஆன ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 28. பூங்காக்கள்

இந்நகரில் பேருந்து நிலையம் அருகில் திரு பி.ஆர்.ராஜகோபால் கவுண்டர் நினைவு பூங்கா ஒன்று நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் பொதுமக்கள் வசதிக்காக மின் சங்கு ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான பலப்பகுட்டை பகுதியில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாடுமிடம் ஒன்று பொதுமக்களின் பொழுது போக்கிற்காக திறக்கப்பட்டுள்ளது. பொது ஏலம் விடப்பட்டு அறிக்கை ஆண்டில் ரூ. /– வரவு வந்துள்ளது. சென்ற ஆண்டு ரூ.5,57,900/– ஆகும்.

## 29. குடிநீர் விநியோகம்

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் தற்போது அமுலில் உள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ரூ.100கோடி மதிப்பீட்டில் ஆயுள்காப்பீட்டு கழகத்திடமிருந்து கடனாக பெற்று பணிகள் நிறைவேற்றப்பட்டு நகராட்சி பராமரிப்புக்கு 29.3.1982 ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

52 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பஞ்சப்பள்ளி அருகில் சின்னாறு ஆற்றிலிருந்து நீருற்று கிணறுகள் ஒன்பது அமைக்கப்பட்டு அதிலிருந்து தண்ணீர் எடுத்து தருமபுரி நகருக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் பணிகள் ரூ.1928.60/– கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 29.11.2013ம் தேதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

2025–2026ம் ஆண்டு இத்திட்டத்தில் 11998 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. குடியிருப்பு உபயோகத்திற்கு 10834 இணைப்புகளும், குடியிருப்பு அல்லாத இனத்தின்கீழ் 569 இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்கு கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு மாதம் 1 க்கு குறைந்த குடிநீர் கட்டணம் ரூ.125/– ஆகும்.அதிகப்படியாக பயன்படுத்தப்படும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கு ரூ.10/– வீதமும், தொழிற்சாலை இணைப்புகளுக்கு மாதம் 1 க்கு குறைந்த பட்ச குடிநீர் கட்டணம் ரூ.305/–ஆகும். அதிகப்படியாக ஒவ்வொரு 1000 லிட்டருக்கு ரூ. 30/–வீதமும், தொழிற் சம்பந்தமான இணைப்புகளுக்கு மாதம் 1 க்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ.305/– வீதமும் அதிகப்படியாக 1000 லிட்டருக்கு ரூ.45/– வீதமும் குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் கட்டணம் 2025–2026 வசூல் விபரம்

| | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 221.48 | 708.76 | 930.24 |
| வசூல் | 5.73 | 474.80 | 480.54 |
| நிலுவை | 215.75 | 233.96 | 449.70 |

நிலுவை வசூல் சதவிகிதம் : 259%
நடப்பு வசூல் சதவிகிதம் : 66.99%
மொத்த வசூல் சதவிகிதம் : 51.66%

## 30. நகரமைப்பு

நகரமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் 1 நகரதிட்டமிடும் அலுவலர், 3 நகரமைப்பு ஆய்வர்கள் மற்றும் 2 சங்கிலியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

விரிவு நகரமைப்பு திட்டங்கள் 16 இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

## 31. சொத்துவரி விதிப்பு

இந்நகராட்சி பகுதியில் உள்ள காலிமனைகளுக்கும், புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கும் கீழ்க்கண்ட விகிதத்தின்படி சொத்துவரி விதிக்கப்படுகிறது.

| | வீட்டு வரி | வருட வாடகை மதிப்பில் அரை வருடத்திற்கு வரிவிகிதம். |
|---|---|---|
| 1. | பொதுகாரியங்களுக்கு | 3.75% |
| 2. | கழிப்பிட வரி | 0.75% |
| 3. | விளக்குவரி | 2.25% |
| 4. | கல்விவரி | 2.50% |
| 5. | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4.25% |
| 6. | நூலகவரி | 1.10% |
| | மொத்தம் | **14.60%** |

| | காலிநில வரி | காலிநிலங்களில் கிரய மதிப்பில் பேரில் அரைவருட வரிவிகிதம் |
|---|---|---|
| 1. | பொதுகாரியங்களுக்கு | 3.75% |
| 2. | கழிப்பிட வரி | 0.75% |
| 3. | விளக்குவரி | 2.25% |
| 4. | கல்விவரி | 2.50% |
| 5. | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4.25% |
| 6. | நூலகவரி | 1.10% |
| | மொத்தம் | **14.60%** |

2025–2026 ம் ஆண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட கேட்பு, வசூல் நிலுவை விபரம் (ரூ.லட்சத்தில்).

| | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 176.57 | 1140.85 | 1317.42 |
| வசூல் | 101.10 | 1005.27 | 1106.37 |
| நிலுவை | 75.47 | 135.57 | 211.05 |

நிலுவை வசூல் சதவிகிதம் : 57.26%
நடப்பு வசூல் சதவிகிதம் : 88.12%
மொத்த வசூல் சதவிகிதம் : 83.98%

## 32. தொழில்வரி

இந்நகராட்சியில் 1.10.2018 முதல் அரசு ஆணை எண் 249 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 28.12.1998 ன்படி நகர்மன்ற தீர்மானம் எண் 450 நாள்.31.05.2018ன் படி புதிய தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

2025–2026 ம் வருட தொழில்வரி வசூல் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. (ரூ.லட்சத்தில்)

| | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 39.86 | 95.71 | 135.57 |
| வசூல் | 23.44 | 83.34 | 106.78 |
| நிலுவை | 16.42 | 12.37 | 28.79 |

நிலுவை வசூல் சதவிகிதம் : 58.80%
நடப்பு வசூல் சதவிகிதம் : 87.08%
மொத்த வசூல் சதவிகிதம் : 78.77%

## 33. வண்டி வாகன வரி

வண்டிவாகன வரியாக அறிக்கை ஆண்டில் வசூல் ஏதும் இல்லை.

## 34. நூல் நிலைய வரி

தமிழ்நாடு நூல்நிலைய சட்டம் 12வது பிரிவின்படி சொத்துவரியின் கீழ் ரூபாய்க்கு 0.10 பைசா வீதம் நூல்நிலைய வரி வசூல் செய்யப்பட்டு மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படுகிறது.

| | | ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | 01.04.2025 ல் செலுத்த வேண்டிய நூலக வரி | 0 |
| 2. | 2025–2026 ம் ஆண்டில் வசூல் செய்தது | 0 |
| 3. | மொத்தம் | **0** |
| 4. | 2025–2026 ம் ஆண்டில் செலுத்தப்பட்டது. | 0 |
| 5. | 31.03.2026 ல் செலுத்தவேண்டிய நிலுவை | **0** |

## 35. நிதி நிலமை

அறிக்கையாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளில் வரவு செலவு கணக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| பொதுநிதி | 2024–2025 | 2025–2026 |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 12216521 | 8801364 |
| வரவு | 120740894 | 270689173 |
| மொத்தம் | 132957415 | 239440537 |
| செலவு | 124156051 | 407301279 |
| முடிவு இருப்பு | 8801364 | 137712101 |

## 36. மானியங்கள்

நடப்புஆண்டில் அரசினரிடமிருந்து பெற்ற மானிய விபரம் பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| 1. | முத்திரை வரி மீதான மான்யம் | 159.00 லட்சம் |
| 2. | மாநில நிதி ஆணைய மானியம் | 1655.93 லட்சம் |
| 3. | 15–வது நிதிக்குழு மான்யம் | 698.10 லட்சம் |
| 4. | கேளிக்கைவரி மான்யம் | 20.00 லட்சம் |
| 5. | KNMT மான்யம் | 87.00 லட்சம் |
| 6. | பாராளுமன்ற உறுப்பினர் மான்யம் | 00.00 லட்சம் |
| 7. | சட்டமன்ற உறுப்பினர் மான்யம் | 85.00 லட்சம் |
| 8. | திறந்தவெளி கழிப்பிடம் ஒழிப்பு திட்டம்SBM | 00.00 லட்சம் |
| 9. | இதர மானியங்கள் | 00.00 லட்சம் |
| 10. | பாதாள சாக்கடை திட்டம் UGSS-II | 1410.06 லட்சம் |
| 11. | நகர்புற சாலைகள் மேம்பாட்டுதிட்டம்TURIF | 359.00 லட்சம் |
| 12. | CGF | 170.10 லட்சம் |
| 13. | NNT | 15.27 லட்சம் |
| 14. | School Improvement Fund | 11.40 லட்சம் |
| 15. | DLI | 220.00 லட்சம் |

## 37. மூலதனச் செலவு

சாலைகள் பராமரிப்புக்காக நடப்பு ஆண்டில் ரூ. 389.40/– லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 38. கடன்கள்

அரசினரிடமிருந்து பல்வேறு திட்டங்களுக்காக பெற்ற கடனுக்கு அசல் மற்றும் வட்டித் தொகையாக அறிக்கையாண்டில் வருவாய் நிதி 424.21 லட்சமும் குடிநீர் நிதி 655.59 லட்சமும் மொத்தம் 1079.80/– லட்சம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## 39. முதலீடுகள்

சேமநலநிதி கணக்கில் இருந்து, முதலீடுகள் மீதான வட்டி எதுவும் வரப்படவில்லை.

## 40. தணிக்கை

2025–2026ஆம் ஆண்டு முடிய நகராட்சியில் வரவு செலவு கணக்குகளை உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, தருமபுரி அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. 2025–2026ஆம் ஆண்டு கணக்குகள் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 31.03.2025ல் நிலுவையாக 256 ஆட்சேபனைகள் உள்ளது. நிலுவை ஆட்சேபனைகள் நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 41. ஆஸ்தியும் பொறுப்பும்

அறிக்கை ஆண்டில் ஆஸ்தி ரூ.239518522/— ஆகவும் பொறுப்பு ரூ.238417567/— ஆகவும் உள்ளது.

## 42. பொது

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் ( பள்ளி கூடம் 5+9 )

இந்நகராட்சியில் 7 ஆரம்பப் பள்ளிகளும், 6 நடுநிலைப் பள்ளிகளும், ஒரு மகளிர் .உயர்நிலைப் பள்ளியும் இயங்கி வருகிறது.மேற்படி 14 பள்ளிகளிலும் சத்துணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பப் பள்ளிகளில் 5 வயது முதல் 9 வயது வரை உள்ள பிள்ளைகளும், நடுநிலைப் பள்ளிகளில் 5 வயது முதல் 9 வயது மற்றும் உயர்நிலைப் பள்ளியில் 10 வயது முதல் 15 வயது வரை உள்ள பிள்ளைகளும் சத்துணவு பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டம் 15.9.2002 ம் தேதி முதல் நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பள்ளி சத்துணவு மையத்திற்கும் ஒரு அமைப்பாளர் வீதம் 14 பள்ளிகளிலும் 14 அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. அமைப்பாளர்களுக்கு உதவியாக ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர்களும் ஆக 14 சமையலர்களும், 14 உதவியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| | மொத்தம் |
|---|---|
| 1 முதல் 5 வரையில் | .. 671 |
| 6 முதல் 5 வரையில் | .. 404 |
| 9 முதல் 10 வரையில் | .. 74 |
| | 1149 |

இத்திட்டத்திற்கான செலவின தொகை முழுவதும் அரசினரால் வழங்கப்படுகிறது.

## 43. முதலமைச்சர் காலை உணவு திட்டம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ல்ட்டமன்ற பேரவையில் 110 விதியின் கீழ் வெளியிடப்பட்ட திட்டமான நகராட்சி/மாநகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்க ஆணையிடப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் 14 பள்ளிகளில் ஒரு உயர்நிலை பள்ளியை தவிர மீதமுள்ள 13 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2025—2026 அறிக்கையாண்டில் 985 மாணவ மாணவியர் பயன்பெறுகின்றனர்.

## 44. பாதாள சாக்கடை திட்ட பணிகள்

இந்நகராட்சி பகுதி 33 வார்டுகளில் முதல் கட்டமாக 19 வார்டுகளில் முழு அளவில் 15 வார்டுகளிலும், 4 வார்டுகளில் பகுதியாகவும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ரூ.2405.00 லட்சமும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்தில் மொத்தம் 6000 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் பொதுமக்களிடமிருது 31.03.2026 வரை 5580 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து முன்வைப்புத் தொகை ரூ.0.16 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிக்கு TNUIFSL இடமிருந்து கடன் தொகை ரூ.525.00 லட்சம் மான்யம் ரூ.1296.00 பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 31.03.2021ம் தேதி வரை ரூ.2174.00லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு கழிவுநீர் குழாய் பராமரிப்பு பணிகள் கழிவு நீரேற்று நிலையங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 02.02.2015ம் தேதி முதல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தில் மான்யம் ரூ.1402.00 கடன் ரூ.625.00 நகராட்சி மற்றும் பொது மக்களின் பங்களிப்பு தொகை ரூ.378.00 லட்சமாகும்.

## 45.வழக்குகள் விபரம் :

பல்வேறு காரணங்களால் நகராட்சி மீது 2025–2026 வரை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் மொத்தம் 16 வழக்குகள் அறிக்கை ஆண்டில் தொடரப்பட்டு நிலுவையாக உள்ளது.

இந்நகராட்சி நிர்வாகம் அறிக்கையாண்டில் சீராக நடைபெறுவதற்கும், பல்வேறு திட்டங்களை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்கும் ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கும், எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் உள் மற்றும் வெளி பிரிவு பணியாளர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் உறுப்பினர்கள்அனைவருக்கும் நிர்வாகம் நல்லமுறையில் நடப்பதற்கு ஒத்துழைப்பு கொடுத்ததற்காக எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு இந்த நிர்வாக அறிக்கையை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
தருமபுரி நகராட்சி